








We Shine Academy™

guiding you to get through

# நடப்பு நிகழ்வுகள்

# (CURRENT AFFAIRS)

## SEPTEMBER

*We Are Here..!! To Guide You..!!*









# We Shine Study Circle

# TNPSC

## நடப்பு நிகழ்வுகள்

## (CURRENT AFFAIRS)

## செப்டம்பர் - 30.09.2018

We Shine Academy™
guiding you to get through


Main Office @

**Weshine Study Circle**

Chromepet, Chennai

Phone: 8939144344, 8939244344

Branch Office @

**Weshine Study Circle**

A-90, 3rd Street (Near K3 Police Station),
Annanagar East
Chennai, Tamil Nadu 600102.

3rd Floor, West Wing, Gokul Arcarde,
No.2, Sardar Patel Road, Adyar
Chennai, Tamilnadu 600020.

https://weshineacademy.com

# பொருளடக்கம்

- தமிழக நிகழ்வுகள்
- இந்திய நிகழ்வுகள்
- முக்கிய தினங்கள்















We Shine Academy™

# இந்திய நிகழ்வுகள்

- **2019ம் ஆண்டிற்கான UNWTO (United Nations World Tourism Organization)** அமைப்பிற்கான அதிகாரப்பூர்வ உலக சுற்றுலா தின கொண்டாட்டங்களை (செப்டம்பர் 27, 2019) இந்தியா நடத்தவுள்ளதை பிரபலபடுத்தும் விதமாக, **‘வியக்கத்தகு இந்தியா’ என்னும் கைப்பேசி செயலியையும், Incredible India mobile app “வியக்கத்தகு இந்தியா சுற்றுலா வழிவகை செய்வோர் சான்றிதழ் திட்டத்தையும்” Incredible India Tourist Facilitators Certification** மத்திய சுற்றுலாத் துறை அமைச்சகம் தொடங்கியுள்ளது.

- **பெங்களூரின் இந்திய அறிவியல் கழகம்** ஆனது, 2019 – ஆண்டின் **டைம்ஸ் உயர் கல்வி Times Higher Education** உலகளாவிய பல்கலைக்கழக தரவரிசைப் பட்டியலில் இந்தியாவின் சிறந்த பல்கலைக்கழகமாக (உலகளவில் 251-300 வரிசையில் உள்ளது) முதலிடத்தில் உள்ளது.
  - **ஐ.ஐ.டி. இந்தூர் ஆனது** (உலகளவில் 351-400 வரிசையிலும்) நாட்டின் இரண்டாவது இடத்தைப் பிடித்துள்ளது.
- **குறிப்பு:**
  - இந்த தரவரிசையில் உலகளவில் **ஆக்ஸ்போர்டு பல்கலைக்கழகம்** முதலிடத்தையும், **கேம்பிரிட்ஜ் இரண்டாவது இடத்தையும்** பெற்றுள்ளது குறிப்பிடத்தக்கது.

- மகாத்மா காந்தியின் 150வது பிறந்த நாளின் இரண்டு ஆண்டுகால கொண்டாட்டங்களை தொடங்குவதற்காக நெதர்லாந்தின் **ஹேக் பகுதியில் உள்ள சமாதான அரண்மனையிலிருந்து குரோட் கெர்க் Peace of Palace of the Hague to Grote Kerk** பகுதி வரையிலான **“காந்தி நடைப் பயணத்தை” Follow the Mahatma** இந்தியா ஏற்பாடு செய்துள்ளது.

- மத்திய வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற விவகாரங்கள் அமைச்சகத்தால் (MoHUA) அறிமுகப்படுத்தப்பட்ட **‘வாழ்வதற்கு**

WeShine Academy TM

**உகந்த குறியீட்டு தரவரிசை’Ease living Index** மாநிலங்களின் பட்டியலில் **ஆந்திரப் பிரதேசமானது** முதலிடத்தில் உள்ளது.

- இப்பட்டியலில் **ஒடிஷா இரண்டாம் இடத்திலும்**, மத்தியப் பிரதேசம் மூன்றாம் இடத்திலும் உள்ளது. இந்த வாழ்வதற்கு உகந்த குறியீடானது **அம்ருத்** அமைச்சகத்தின் (புனரமைப்பு மற்றும் நகர்புற மாற்றத்திற்கான அடல் திட்டம் உருமாற்றும் முயற்சியாகும். **AMRUT (Atal Mission for Rejuvenation and Urban Transformation)**

## உலக நிகழ்வுகள்

- நெல்சன் மண்டேலா – சமாதானத்தின் தசாப்தம் :
    - இந்த ஆண்டு நெல்சன் மண்டேலா-வின் 100 வது பிறந்த ஆண்டை முன்னிட்டு, **ஐ.நா. சபையானது 2019-2028 காலத்தை ‘நெல்சன் மண்டேலா சமாதானத்தின் தசாப்தம்’ “Nelson Mandela decade of Peace”** என அறிவித்துள்ளது.
    - மேலும், தென்னாப்பிரிக்காவில் பிறந்த நெல்சன் மண்டேலாவின் பிறப்பை கவுரவிக்கும் வகையில் அவரது சிலையானது ஐ.நா. சபையில் திறக்கப்பட்டுள்ளது.

- அரசியல் மற்றும் முடிவெடுக்கும் செயல்முறைகளில் பெண்களின் பங்களிப்பை சுட்டிக் காட்டும் விதமாக, முதன்முதலாக பெண் வெளியுறவுத்துறை அமைச்சர்கள் மட்டும் பங்கேற்ற மாநாடு **கனடாவின் மாண்ட்ரியலில்** நடைபெற்றுள்ளது.
    - இந்த மாநாடானது கனடாவின் சிறந்த இராஜ தந்திரியான **கிறிஸ்டியோ ஃபிரீலாண்ட் Chrystia Freeland** மற்றும் ஐரோப்பிய ஒன்றியத்தின் Europe Union வெளியுறவுத் துறை பிரதிநிதியான **ஃபெடரிகா மொஹெரினி Federica Mogherini** ஆகியோரால் தலைமை தாங்கப்பட்டது.

## முக்கிய தினங்கள்



We Shine Academy TM

- சர்வதேச ஒட்டுமொத்த **அணு ஆயுத ஒழிப்பு தினம் - செப்டம்பர் 26**
    - உலகளாவிய அளவில் அணுசக்தி ஆயுதங்களை குறைப்பதே மிக முக்கியம் என்பதை உலக சமுதாயத்திற்கு வலியுறுத்துவதற்காக, ஒவ்வொரு ஆண்டும் செப்டம்பர் 26ம் நாள் சர்வதேச ஒட்டுமொத்த அணு ஆயுத ஒழிப்பு தினம் **(International Day for the Total Elimination of Nuclear Weapons)** கொண்டாடப்படுகிறது.
    - இத்தினமானது டிசம்பர் 2013ல் ஐ.நா. பொதுச் சபையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு, 2014ம் ஆண்டு முதல் கொண்டாடப்பட்டு வருகிறது.
- **குறிப்பு :**
    - சர்வதேச அணுசக்தி சோதனைகளுக்கு எதிரான தினமாக **International Day against Nuclear Test ஆகஸ்ட் 29ஐ** ஐ.நா. பொதுச்சபையானது அறிவித்தது குறிப்பிடத்தக்கது.

- **உலகக் கடல் தினம் - செப்டம்பர் 27 World Maritime Day**
    - கடல் பாதுகாப்பு, கடல் போக்குவரத்து பாதுகாப்பு மற்றும் கடல் சூழல் ஆகியவற்றின் முக்கியத்துவத்தை வலியுறுத்துவதற்காக, ஒவ்வொரு ஆண்டும் செப்டம்பர் மாதத்தின் கடைசி வியாழக்கிழமையன்று உலகக் கடல் தினமாக கடைபிடிக்கப்படுகிறது
    - **இத்தினத்தின் கருத்துரு : "IMO70** : நமது மரபுரிமை – சிறந்த எதிர்காலத்தற்கான சிறந்த கடல் போக்குவரத்து" **IMO 70 Our Heritage – Better Shipping for a Better Future.**
    - இத்தினமானது முதன் முதலாக **1978ல்** கொண்டாடப்பட்டது குறிப்பிடத்தக்கது.